# ’எழில்நிலா’ பற்றி ஆனந்தவிகடன் கூறியது..

எழில்நிலா வலைத்தளம் பற்றி ‘ஆனந்தவிகடன்’ தனது ஜனவரி 23, 2008 இதழில் இப்படி எழுதியிருக்கின்றது.



எழில்நிலா www.ezilnila.com

கனடாவைச் சேர்ந்த மகேன் என்பவரின் இணையம். இதில் இடம் பெற்றிருக்கும் கணினி தமிழ்ப் பயன்பாடு குறித்த கட்டுரைகள் அனைவருக்கும் உபயோகமானவை. உலகின் பல பெரிய நாடுகளுக்கும் மென்பொருட்களை உருவாக்கி ஏற்றுமதி செய்யும் கணிப்பொறியாளர்கள் அதிகம் உள்ள நம்மூரில்தான், தமிழ் மென்பொருட்களை உருவாக்குவது மாட்டுவண்டி வேகத்தில் நகர்கிறது என்கிறது, ‘தகவல் நெடுஞ்சாலையில் தமிழ் டவுன் பஸ்’ கட்டுரை. ‘தமிழ் கணினியில் நான் கடந்து வந்த சில அனுபவங்கள்’ கட்டுரை தமிழ் கம்ப்யூட்டர் வரலாற்றை அறிமுகம் செய்து, நாம் எப்படி முன்னேற வேண்டும் என்றும் வழிகாட்டுகிறது!

120 23.1.08 ஆனந்த விகடன்